# மே 2021 வாக்குத்தத்தம்

**“நீ படப்போகிற பாடுகளைக் குறித்து எவ்வளவும் பயப்படாதே; இதோ, நீங்கள் சோதிக்கப்படும் பொருட்டாகப் பிசாசானவன் உங்களில் சிலரைக் காவலில் போடுவேன்; பத்துநாள் உபத்திரப் படுவீர்கள். ஆகிலும் நீ மரணபரியந்தமும் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவ கிரீடத்தை உனக்குத் தருவேன்”** (வெளி. 2:10).

இந்த வசனத்தைப் படிக்கும்போது நமக்குள் ஒரு தைரியமும், ஒரு உற்சாகமும் பிறக்கும். காரணம், இன்று நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் வாழ்ககை நிலையற்றதாக உள்ளது. எந்த நேரத்தில், எந்த வேளையில், எது நடக்கும் என்று தெரியாமல் தவித்துக் கொண்டிருக்கிறோம். ஏன்? பாவிகளோடு பரிசுத்தவான்களும், கர்த்தருக்கு பயந்தவர்களும் தண்டிக்கப் படுகின்றார்களே. ஏன், ஏன் என்ற கேள்வி நம் மனதை வேதனைப் படுத்துகிறது.

இவ்வசனத்தின் அடுத்த வரிகளைப் பார்க்கும்போது, நீங்கள் சோதிக்கப்படும் பொருட்டாக இது சோதனையின் காலம். நம்மை தேவன் இன்னும் புடமிடுகிறார், உருவேற் படுத்துகிறார் இப்போதுள்ள நிலமைகளை நாம் சகிக்க வேண்டும், பொறுக்க வேண்டும். இது வந்தது நல்லது. எனவேதான், உம்மை அதிகம் நெருங்குகிறேன் என்று சந்தோஷப்பட வேண்டும்.

ஆண்டவர் எல்லாவற்றிற்கும் காலம் வைத்துள்ளார். நமக்கு இப்போதுள்ள நிலைமை மாற வேண்டுமானால், நம்மைத் தாழ்த்தி, நம்மையும், மற்றவர்களையும் தேவ சமூகத்தில் ஒப்புக்கொடுத்து ஜெபிக்க வேண்டும். இவ்வசனம் கடைசியில், “நீ மரண பரியந்தம் உண்மையாயிரு” என்று சொல்கிறது. நாம் எப்பொழுதும் உண்மையுடன் தேவ சமூகத்தில் காத்துக் கொண்டிருக்கும்போது, கர்த்தர் நம்மை எல்லா ஆபத்துக் களுக்கும் விலக்கி காத்துக் கொள்வார்!

அற்புதத்தை எதிர்பாருங்கள்!

அற்புத பணியில் உங்கள் அன்பு சகோதரி,
சாந்தி சாலமோன்